
பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்



சோலிட்


பம்பையே வாங்குங்கள்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

When, only The best is Good Enough



Buy Solide Pumps

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு ஆவணி மீ 27 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 29 ( 12 - 09 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 181

★ மாகாண சபைத் தேர்தலில்

# விடுதலைப் புலிகளையும் பங்கு பற்ற வைக்க வேண்டும்

## வடக்கு — கிழக்கு இணைப்பு பிரகடனம் குறித்து அமிர் கருத்து

கொழும்பு, செப்டெம்பர் 12

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இந்திய அமைதிப்படை அமைதி ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதுடன் அவர்களையும் மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்ற வைக்கவேண்டும்.**

வடக்கு, கிழக்கு மாகாண இணைப்புப் பற்றிய ஜனாதிபதி பிரகடனம் குறித்து கருத்து வெளியிட்டபோது தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கம் இப்படிச் சொன்னார்.

''இணைப்புப் பிரகடனம் வெளியிடப்பட்டது மகிழ்ச்சி தருகிறது. நீண்ட காலதாமதத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சரியான முடிவு இது.

''இணைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் பற்றிய ஏனைய அறிவிப்புக்கள் வெளிவந்த பின்னர் தான் முழு அபிப்பிராயத்தையும் வெளியிட முடியும்''

இப்படி திரு அமிர்தலிங்கம் மேலும் கூறினார். (இ-எ)

### இணைப்புக்கு எதிராக கொழும்பில் சுவரொட்டி

வடக்கு - கிழக்கு இணைப்புப் பிரகடனத்தை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்யும்படி கோரும் சுவரொட்டிகள் கொழும்பு நகரில் பரவலாக ஒட்டப்பட்டிருக்கின்றன.

ஜே. வி. பி இயக்கத்தினர் இச் சுவரொட்டிகளை ஒட்டி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தவுடன் இந்தப் பிரகடனம் ரத்துச் செய்யப்படும் எனவும் பின்னர் இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்தப்படும் என்றும் அத்தனகல்லை எம். பி. லஷ்மன் ஜெயக்கொடி செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்தார் (இ-எ)

### நல்லூர் மஹோற்சவம் முடிவுற்றது

யாழ்ப்பாணம், செப். 12

கடந்த மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமான நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம் நேற்று பூங்காவனத்துடன் இனிதாக முடிவுற்றது. (இ)

ஒப்பந்தத்தில் உள்ள

# ஏனைய அம்சங்களையும் செயற்படுத்த வேண்டும்

## ஈ. பி, ஆர். எல், எப். அறிக்கை

புதுடில்லி, செப் 12

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள ஏனைய அம்சங்களையும் இரண்டு அரசுகளும் விரைந்து செயல்படுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பாக ஈழ மக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எப்) விடுத்த அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைக்கப்பட்ட மாகாண சபையின் தேர்தல் பற்றி அறிவிக்கும் முன்னர் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளபடி தமிழை உத்தியோக மொழியாக்கும் விதியை உடனடியாக அமுல் நடத்தும் படியும் ஈ பி ஆர். எல் எப் தனது அறிக்கையில் கோரியுள்ளது.

ரெலோ விடுத்த அறிக்கையில் இணைப்புப் பிரகடனம் வெளியிடப்பட்டதற்கு இந்தியாவுக்கு நன்றியைத் தெரிவித்துள்ளது (இ-எ)

### புத்தூர் பகுதியில் பதற்றம்

கோப்பாய், செப் 12

சனிக்கிழமை இரவு புத்தூர்ப் பகுதியில் கிரனைட் சத்தமும் அதனைத் தொடர்ந்து வெடிச் சத்தங்களும் கேட்டன.

நேற்றுப் பகல் 11மணியளவில் நீர்வேலி சந்திக்கு அப்பால் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

மீண்டும் 1-00 மணியளவில் வாகனப் போக்குவரத்துக்கள் அனுமதிக்கப்பட்டன. (இ-72)

ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நேரங்களில்

## முல்லைத்தீவில் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் உணவு விநியோகம்

ஒட்டுசுட்டான் செப் 12

முல்லைத்தீவு பகுதியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன.

மாங்குளம் உணவுக் களஞ்சிய திலிருந்து அரிசி, மா, சீனி ஆகியவை லொறிகளில் முத்துஐயன்கட்டு, கரைதுறைபற்று, புதுக்குடியிருப்பு ப நோ. கூ. சங்கங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

எனினும் மீசல, மண்ணெண்ணெய் என்பனவற்றுக்குத் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவுகிறது.

இதே வேளை இப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல், உப உணவுப் பொருள்களை சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர்.

உணவுப் பொருள்கள் விநியோக விடயமாக அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் மேலதிக அரச அதிபர் திரு. கே. சண்முகலிங்கம் ஆகியோர் கூட்டாக எடுத்த முயற்சியின் பயனாகவே முல்லைத்தீவில் உணவுத் தட்டுப்பாடு நீங்கி உள்ளது. (இ-113)

### ஆஸ்பத்திரி ஊழியர் கொலை

யாழ்ப்பாணம். செப் 12

நேற்றுக்காலை ஆனைக்கோட்டையில் வைத்து ஆர். சிவனேஸ்வரராசா (வயது 32) என்ற உரும்பிராய் வாசி இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

### ரயில் வந்து சென்றது

யாழ்ப்பாணம் செப்12

நேற்றும்யாழ் நகருக்கு வார இறுதிப் பயணிகள் ரயில் வந்து, சென்றது. இந்த ரயிலில் அதிகளவு எண்ணிக்கையானோர் பயணம் செய்தனர். [இ-9]

முச்சந்தி முரளி



அதிகாரத்தைப் பிடிக்கும் வரை இப்படி எத்தனையோ வாக்குறுதிகள் வரப்போகின்றன பாவ.

நாவலர் வீதியில் நேற்றுமாலை

## கிரனைட்தாக்குதலை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாணம் செப் 12

நேற்று மாலை 6 30 மணி அளவில் நல்லூர் நாவலர் விடுதி அமைதிப்படை முகாமுக்கு அண்மையில் இனந்தெரியாத நபர்களினால் கிரனைட் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது.

நல்லூர் உற்சவ இறுதி நாளான நேற்று நல்லூர் கோவிலுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் வந்திருந்தனர்.

கிரனைட் வெடிப்பு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து மக்கள் வீதிகளில் சிதறி ஓடினர்.

நல்லூரிலே கடைகள் அமைத்திருந்தவர்கள் கடைகளை இழுத்து மூடினர். சம்பவம் நடந்து சுமார் 10 நிமிடத்தில் நல்லூர் ஆலய வளவு வெறிச்சோடிக் காணப்பட்டது.

சிறிது நேரத்தின் பின் அப்பகுதியில் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (இ-9)

### சுபநேரம்

12 - 09 - 88

ஆவணி - 27

திங்கட்கிழமை

சுபநேரம்:

12 03 முதல் 01.33வரை

ராகுகாலம்:

07.33 முதல் 09.03வரை

மறைஞான சம்பந்தர் குருபூஜை

தியாகி திலீபனின் மறைவையொட்டி

# 15முதல் 26 ஆம் திகதிவரை சாத்வீக தினம் அனுஷ்டிப்பு

## இணைப்புக் குழு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 12

தமிழர் உரிமைகளை வென்றெடுக்க சாகும் வரை உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்த தியாகி திலீபனின் மறைவையொட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதிவரையான நாட்களை சாத்வீக தினங்களாக அனுஷ்டிக்க வேண்டும்.

இந்தத் தீர்மானம் நேற்றுக் காலையில் நடைபெற்ற வடக்கு,கிழக்கு பிரசைகள் குழுவின் இணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இதற்கமைய அனைவரும் தமது இல்லங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள் என்பனவற்றில் கறுப்புக் கொடிகளைப்பறக்க விட வேண்டும் அரச, தனியார், திணைக்கள கூட்டுத்தா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அரியாலை பிரசைகள் குழு பெரும் அளவில் ஏற்பாடு

## நகரில் ஊர்வலமும் நடத்தப்படும்

யாழ்ப்பாணம், செப். 12

விடுதலைப் புலி திலீபனின் தியாக வாழ்வின் ஓராண்டு நிறைவை நினைவு கூரும்முகமாக காந்திய வழியிலான போராட்டங்களை அரியாலை பிரசைகள் குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

15 ஆம் திகதியில் இருந்து 26 ஆம் திகதிவரை யாழ்நகரம் எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்படும்.

முடியுமான இடங்களில் சோக கீதங்கள் இசைக்கப்படும்

26 ஆம் திகதி மாபெரும் ஊர்வலம் ஒன்று யாழ் நகரில் நடத்தப்படும்.

நேற்று அரியாலை பிரசைகள் குழுக் கூட்டம் பிரசைகள் குழுக்காரியாலய மண்டபத்தில் நடைபெற்ற பொழுது மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அரியாலை பிரசைகள் குழுத்தலைவர் பொ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 20 க்கும் மேற்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

26 ஆம் திகதி ஊர்வலம் நடைபெறும் பொழுது கடைகளைப் பூட்டியும், வாகனப் போக்குவரத்தைத் தவிர்த்தும் பொதுமக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் பெருமளவில் ஊர்வலத்தில் கலந்து கொண்டு தமது பங்களிப்பை நல்க வேண்டும்என்றும் கோரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று முதல் வழமைபோல் போக்குவரத்து

நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுடன் முடிவடைந்ததை அடுத்து இன்று முதல் பருத்தித்துறை வீதி போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட உள்ளது.

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு பருத்தித்துறை - யாழ் வீதி அரசடி சந்தி முதல், யாழ் மாநகரசபை வரையான பாதை வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. (இ-9)

சுதந்திரக்கட்சி அரசு அமைத்தால்

## தடுப்புக் காவலிலுள்ள அனைவரும் விடுதலையாவர்

### சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு.செப்.12

சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைத்தவுடன், தற்போதைய அரசினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்படுவர்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா திஸ்ஸமஹாராமவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் சொன்னவாவது;

வீடுகளில் இருந்து பலர் காணமற்போகிறார்கள். தடுப்பு முகாம்களில் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

அரசின் அடக்குமுறை காரணமாக தெற்கிலும் வடக்கிலும் வன்செயலில் ஈடுபட மக்கள் தூண்டப்படுகிறார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பிரச்சினைகளைப் பொறுத்தளவில், வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு இடமளிக்காமல் தமிழருடன் சுதந்திரக் கட்சி அரசு நேரடிப்பேச்சுக்களை நடத்தும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (இ-எ)

### புத்தூரில் குடிசை தீப்பிடித்தது

கோப்பாய். செப் 12

புத்தூர் கிழக்கு குமாரசுவாமி வீதியில் குடிசை ஒன்று எரிந்ததால் மாணிக்கம் மீனாட்சி (55 வயது) என்பவர் காயம் அடைந்து யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

சனிக்கிழமை இரவு இச் சம்பவம் நடந்தது.

சின்னக்குட்டி கந்தசுவாமி என்பவரின் குடிசையே தீப்பிடித்தது.

பாரகுண்டு ஒன்று விழுந்தாலேயே குடிசை தீப்பிடித்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது (இ-72)

### அம்பாறையில் 11பேர் கொலை

கொழும்பு, செப். 12

நான்கு தமிழர் உட்பட 11 பேர் அம்பாறை மாவட்டத்தில் சென்றல் காம்ப் என்னுமிடத்தில் இனந்தெரியாத நபர்களினால் குத்திக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களில் ஐந்து பெண்கள், ஐந்து குழந்தைகள் இருக்கின்றனர்.

4 பெண்களும் ஒரு ஆணும் காயமடைந்தனர்.

இத்தாக்குதல் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### ரயில் புறப்பட்டவுடன் தாமதிக்கக்கூடாது

யாழ்ப்பாணம், செப்12

யாழ் ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு செல்லும் தமது உறவினர்களையும். நண்பர்களையும் வழி அனுப்ப வருபவர்கள் ரயில நிலைய மேடையில் அதிகநேரம் நிற்க முடியாது.

ரயிலில் பயணம் செய்பவர்கள் ரயிலில் ஏறிய பின்னர் ஏனையவர்களை ரயில் மேடையை விட்டு வெளியேறுமாறு இந்திய அமைதிப் படையினர் ஒலிபெருக்கிமூலம் வேண்டுகோள்விடுக்கின்றனர்.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (இ-5)

உ

## திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 27ஆந் திகதி (12-09-88) திங்கட்கிழமை பகல் 12 03—1 33 மணியளவில் வரும் சுபவேளையில்

### யாழ். றிக்கோ சுவீற் அன் கிறீம் ஹவுஸ்

எனும் நிறுவனத்தை
யாழ் மாநகரசபை ஆணையாளர்
**திரு. சி. வி. கே. சிவஞானம்**
அவர்கள் திறந்து வைப்பார்.

அத்தருணம் அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் சமுகந்தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

52, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

யாழ். றிக்கோ சுவீற்
அன் கிறீம் ஹவுஸ்
ஸ்தாபனத்தார்.

(6403)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Hall Setty Set ம் இரண்டு கட்டிலும் 2 Box Spring மெத்தையும் விற்பனைக்குண்டு விராங்கட்டு 21, 1 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (6387)

N. V. 100 Video Deck. Sony Camera H. V. C 3000 P ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: நீகல் வீடியோ மூவிஸ். 13/1. கடற்கரை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (6380)

சுத்தமான சுகாதார முறைப்படி வெட்டிய புரொயிலர் கோழி இறைச்சி (Halal) விற்பனைக்கு உண்டு. தொடர்பு M G M. & Stores. No. 777. K K S Road. Jaffna. (6390)

Broiler (புரொயிலர்) கோழிகள், முட்டைகள் தொகையாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். அன்னுபாம், இணுவில். (C/ 128)

யாழ்ப்பாணத்தில் K.K.S. ரோட்டில் ஒரு மாடியுடன் கூடிய கடை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No. 359, C/o உதயன், யாழ்ப்பாணம். 6383

பிறிமா இன (Prima) ஒருநாள் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் 10-9-88 முதல் விநியோகிக்கப்படும். அத்துடன் ஒரு நாள் சேவல் குஞ்சுகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்க:- M.G.M. Forage Stores, 208. Ist Cross Street, Jaffna. (6172)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் Shetna B 380, Prima Lohmann Golden Comet, Hyline றெற்ரு பிறவுண், பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், புரையிலர், குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம், முன் கூட்டியே பதிவு செய்யவும். விபரங்களுக்கு 1. R. S. K. Farm, முருகபதி உடுவில். 2. குபேரன் ஸ்ரோர்ஸ். கொக்குவில் சந்தி, கொக்குவில். (6380)

ஒரு நாள் கோழிக் குஞ்சு பேடு, சேவல் சறுப்பு விலைகள் 14/50, 7/50, வெள்ளை 3/50, 13/50, R. I. R. 12/50 6/50, கோல்டன் கொமற் பேடு 14/-, சேவல் 4/50 தொடர்பு: 1. கௌரி ஸ்ரோர்ஸ், மாஸ் கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 2. தாஸ் நாமகள் ஒழுங்கை, சத்தி சம்பியன் ஒழுங்கை, பொற்பதிரோட், (கொக்குவில் கிழக்கு) கொக்குவில். S. T. R. அன்சன்ஸ், மாஸ் கடை திருநெல்வேலிச் சந்தி. (6384)

### தாரா, கோழிக்குஞ்சு விநியோகம்

"கைலேன்" சறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், "செட்னு பாம்" சேவற் குஞ்சுகளும், புரேயிலர்க் குஞ்சுகளும், நல்ல இன கறுப்பு, வெள்ளை தாராக் குஞ்சுகளும் 16,30ந் திகதிகளில் விநியோகிக்கப்படும். A. J. S. பாம், 45, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம், லீலாபதி கண்டி வீதி, மிருசுவில். (6405)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் பருத்தித்துறை வீதியையும் ஸ்டேசன் வீதியையும் இணைக்கும் First Lane அருகே வீடுகட்டுவதற்குவசதியான மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு. No 356 C/o Uthayan. Jaffna (C151)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

## தேவை

சுருக்குக்சேற் வேலை செய்யத் தெரிந்தவர்கள் தேவை. உடன் வரவும். தாசன் ஹாட் வெயர், 225, ஸ்ரான்லி ரோட், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (6379)

### மணமகன் தேவை

இந்துமத, வேளாள குலத்தைச் சேர்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியை வயது 37 நல்ல நிறமுள்ள, 2ல் செவ்வாய், பரணி நட்சத்திரம் உடைய பெண்ணிற்கு அரசாங்க துறைகளில், கூட்டுஸ்தாபனங்களில் வங்கிகளில் கொம்பனிகளில் கடமையாற்றுபவர்கள் விரும்பத்தக்கது. சீதனம் நேரில் பேசித்தீர்க்கலாம் தொடர்பு: C/o 191, உதயன். (6199)

## சேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N.P. லோகேஸ்வரன், No. 33 மூத்த விநாயகர் 1 ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

### A/L இரசாயனம்

108, Brown Road, Jaffna, A/L 89 சேதன இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 13. 9. 88 செவ்வாய் 4. 30(p.m) (செவ்,வியா 4. 30 p.m) பௌதிக இரசாயனம்- ஆரம்பம் (16. 9 88) வெள்ளி 4 30 p. m. விபரங்கள் நேரில். இவ்வாசிரியரின் சேதன இரசாயனம் நூல் வெளிவந்து விட்டது. (6362)

### A/L இரசாயனம்

108, Brown Road Jaffna A/L 89 இரசாயனம் ஒரு வருட வகுப்பு ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 12 9. 88 திங்கள் 5. 15 p.m (திங், செவ், புதன், வியா, வெள்ளி) எல்லா நட்களும், பிரிவுII ஆரம்பம் 11- 9- 88 ஞாயிறு 4. 30 (p. m. ) (சனி, ஞாயிறு). விபரங்கள் நேரில் இவ்வாசியரின் சேதன இரசாயனம் நூல் வெளிவந்துவிட்டது (6363)

### தவறிவிட்டது

இணுவில் கந்தையா குமாரசாமி என்பவருடைய அடையாள அட்டை தொலைந்து விட்டது. கண்டு எடுப்பவர் கன்னும் பாலன் ஸ்ரோரில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/ 163)

ஸ்ரீபத்மநாதன் விஜயலட்சுமி ஆகிய எனது அடையாள அட்டை விலாசம் 'லட்சுமிபதி' சரசாலை மத்தி, சாவகச்சேரி உடையது. மனோகராச்சந்திக்கும் இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6408)

### சன்மானம் தரப்படும்

சுழிபுரம் கிழக்கு ஜெமிந்தார் செல்வமலர் ஆகிய நான் தேசிய அடையாள அட்டையை இல 606832873 V தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை பஸ் தரிப்பில் தவறவிட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் என்னிடம் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: திருமதி ஜெமிந்தார் செல்வமலர் சுழிபுரம் கிழக்கு. (6388)

### ஓர் நற்செய்தி

புலவர் திரு. கீரன் அவர்கள் கொழும்பு ஜிந்துப்பிட்டி சுதிரேசன் ஆலயத்தில் 12 நாட்களாக உரையாற்றிய கருத்தாழம்மிக்க சமய சொற்பொழிவுகள் எமது நிறுவனத்தில் பதிவு செய்து கொடுக்கப்படும். ஷதிஸ் றெக்கோடிங் ஸ்ரூடியோ 189 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6386)

## 61 ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் த. வியலேஸ்வரன் (B.Com.)**
(பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன்)

தோற்றம்: 25 - 09 - 1963 மறைவு: 18 - 07 - 1988

அன்னாரின் வீட்டுக்கிரியைகள் எதிர்வரும் 16-09-1988 வெள்ளிக்கிழமை பூநகரி, தம் பிராயிலுள்ள இல்லத்தில் நடைபெறும். உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர். (6411)

### சோதிட, மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கு நாடுங்கள்;- 'சக்தி சரவணா' (அரசஅங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்புபாரம்பரிய-பரம்பரைமாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ். இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (6372)

### காரைநகரில் கையெழுத்துப் போராட்டம்

காரைநகர். செப் 12 பூஸாக் கைதி விடுதலை செய்யக்கோரி ஈரோஸ் நடத்தும் கையெழுத்துப் போராட்டம் காரைநகர் பாடசாலைகளில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (இ- 73)

# ENGLISH TEACHERS' TRAINING ENTRANCE EXAM.

15, TWO HOUR PRACTICE CLASSES BY

**S. B. IYAR**

**Commences on 17-9-88**
SAT, SUN ONLY
Time: 12.30 — 2.30 p.m.

**12, Wyman Road, Nallur.**

(6406)

## பிரயாண ஒழுங்கு

நம்பிக்கையாகக் கனடா செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

நேரடியாக கனடா செல்ல இருவருக்கு வாய்ப்பு உண்டு ஆங்கில அறிவு இருத்தல் வேண்டும்.

"திருப்பரங்குன்றம்"
வேலணை மேற்கு.
(வயிரவர் கோயிலடி) (6409)

உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விபவ வருஷம் ஆவணி மாதம் 30ஆம் நாள் (15-9-88) வியாழக்கிழமை காலை 9.05 மணி தொடக்கம் 10.05 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

| எமது திருநிறை செல்வன் | எமது திருநிறை செல்வி |
|---|---|
| **யோகேஸ்வரன்** | **இரத்தினேஸ்வரி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் நிகழப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. த. சுப்பிரமணியமும் பாரியாரும், திரு. தா. தர்மலிங்கம் மாத்தனை லேன், கொக்குவில்.

திருமதி நா. இரத்தினசபாபதி 28, ஒட்டுமடம் ரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.
( இரு வீட்டார் அழைப்பு ) (6410)

உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருஷம் ஆவணி மாதம் 29 ஆம் நாள் (14 - 09 - 88) புதன்கிழமை காலை 6 00 மணிமுதல் 8 . 05 வரையுள்ள ★ சுபவேளையில் ★

| எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் | எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி |
|---|---|
| **இரட்ணராஜா** (Electrical Foreman, Dubai) | **யோகாம்பிகை** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

அத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருமணம் செய்யத் திருவருள் கூடியிருப்பதால், அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அன்புடன் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் ★ அன்புடன் அழைக்கின்றோம். ★

திருமதி பா. சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர் பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்

திருமதி வ. சிவசிதம்பரம் (அழகப்பெருமாள் வேலணை-2) மே/பா. N. ஜெயராஜா 25/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

(C-166)

# SCIENCE ACADEMY - JAFFNA

(B. M. Cக்கு முன்பாக) வெலிங்டன் சந்தி

**DAY CLASS பிரிவு II ஆரம்பம்: 14 - 9 - 88 புதன்**

திங்./புதன்/வெள்ளி 1-00 p.m பொறியியல் — சோதிலிங்கம் B Sc.
திங்./புதன்/வெள்ளி 2-00 p.m. ஒளியியல் — சோதிலிங்கம் B Sc.
செவ்./வியா. 1-00 p.m அசேதன இரசாயனம் — சண் B Sc
செவ்./வியா. 2-30 p.m மூட்டிய கோல் — வெக்டர் B.Sc.
செவ்./வியா. 3-30 p.m. கணத்தாக்கு உந்தம் — வேலாயுதம் B.Sc.
4-30 p.m. வட்டம் — வெக்டர் வேலாயுதம்
(6371)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்
**சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை**

மண்ணில்: 06 - 10 - 1943 விண்ணில்: 29 - 3 - 1988

'நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ்வுலகு'
— என்ற வள்ளுவன் வாக்கை மெய்ப்பித்தவன் 'பசு'

உள்ளத்தால் உள்ளன்புடன் உள்ளிய உறவினர்க்கு உயிரானவன் 'பிள்ளை'. ஏழைகளின் இதயங்களில் நிறைந்தவன் பசுபதிப்பிள்ளை. மென்மையான இதயமும் உறுதியான உள்ளமுங் கொண்ட எம் குடும்பத்தலைவனது இன்றைய நினைவு நன்னாளில் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை உறவினர்கள், நண்பர்களுடன் இணைந்து பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு மனைவி, மக்கள். சகோதர சகோதரிகள், மைத்துனர்மார், விதானையார் வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய். (6467)

J. M. J

# S.P.ANTON

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்

## வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

**கனடா, ஜெர்மனி, பிரான்ஸ், சுவிஸ், அமெரிக்கா, இத்தாலி**

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். ஒவ்வொரு வாரமும் எமது சிறு குழுக்கள் இறைவன் நல்லருளுடன் மேற்படி நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன நீங்கள்விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளுவதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம். எனவே விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

1. செல்வம் கொழிக்கும் **குவைத் நாட்டில் உடன் வேலைவாய்ப்பு**

ஆஸ்பத்திரி, பாடசாலை மற்றும் பொது அலுவலகங்களில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்

**CLEANERS**

✱ குவைத் கப்பல் வேலை வாய்ப்புகள்

இவற்றில் பணியாற்றுவதற்கு விருப்புகிறீர்களா

**இதோ ஓர் அரிய வாய்ப்பு!**

கடவுச்சீட்டு இல்லாதவர்களுக்கு அதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்து அடுத்த பத்து நாட்களுக்குள் பயணம் செய்வதற்கான உடனடிப் பயண ஒழுங்குகளையும் செய்து கொடுக்கிறோம்.

சம்பளம்: 35—40 குவைத் டினார்கள்
உணவு, உறைவிடம் இலவசம்.
மற்றும் சகல விபரங்களுக்கும் உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பயண அமைப்பாளர்:

# S. P. ANTON

No. 648½, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
(C/165)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### பொன்னையா நிலானி (நிலா)

சரவெட்டி மேற்கு மத்தொனியைச் சேர்ந்த பொன்னையா நாமகள் தம்பதிகளின் அருந்தவப் புதல்வி நிலானி தனது முதலாவது பிறந்ததினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை முங் கோடைமுருகன் அருள் பெற்றுப் பலகலைகளும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, பெரியண்ணா, ஆசையண்ணா, சின்னண்ணா, பெரியமாமா, மாமி மச்சாள்மார், சின்னமாமா (ஜேர்மன்) ராதாஅன்ரி, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, சர்வேஸ் அப்பப்பா, ராஜன் சித்தப்பா, சாரதா அக்கா, சுவர்ணா அக்கா, குடும்பத்தினர், கிஷோ அன்ரா குடும்பத்தினர் (வட்டுக்கோட்டை) மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

(6451)

## ✯ பிறந்தநாள் வாழ்த்து ✯



### செல்வன் பி. நிரோஜனன்

பிறந்த திகதி — 12-09-1987

தச்சந்தோப்பைச் சேர்ந்த பிரேம்குமார் மல்லிகாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### ✯ '' நிரோஜனன் '' ✯

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று [12-09-1988] அவரது இல்லத்தில் கோலாகலமாகக் கொண்டாடுகின்றார். அவரை அப்பா, அம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர்கள் ஆகியோர் பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(C-1)

# விடுதலைப் புலிகளை ஒதுக்கிவிட்டு தேர்தல் நடத்துவது சாத்தியமல்ல

வவுனியா, செப் 12

போராளிக் குழுக்களினது இணக்கமின்றித் தேர்தல் நடத்துவது கஷ்டமான காரியமாக இருக்கும். குறிப்பாக விடுதலைப் புலிகளை ஒதுக்கிவிட்டு தேர்தலை நடத்துவது என்பது சாத்தியமற்றது.

வவுனியாவில்மாகாண சபைத்தேர்தலை நடத்த முடியுமா? அதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா? என்பது குறித்து வவுனியா வர்த்தகப் பிரமுகர்களிடமும் முன்னைநாள் பிரசைகள் குழு பிரமுகர்களிடமும் வவுனியாவில் உள்ள இந்திய அமைதிப்படையினர் கருத்துக் கேட்ட போது மேற்கண்டவாறு

### வவுனியா நிலைமை குறித்து படையினரிடம் விளக்கம்

பதில் அளிக்கப்பட்டுள்ளது.

சமாதான ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு இணைப்பு, அரசியல் கைதிகள் விடுதலை போன்ற விடயங்களை உடனடியாக அமுல்படுத்தியும் தமிழ் பகுதிகளில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தியும் செயற்பட்டால் விடுதலைப் புலிகள் ஒருவேளை இணங்கக் கூடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வர்த்தகப் பிரமுகரான திரு ரீ.கே. இராஜலிங்கம் பிரசைகள்குழுப் பிரமுகரான திரு. சுப்பிரமணியம் ஆகியோரையும் மற்றும் சிலரையும் வவுனியா நகரக் கொமாண்டன்ற் பி. எஸ். ஹூண்டால் நேரில் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்துள்ளார்.

(இ-164)

### 3தமிழர்கள் கடத்தப்பட்டனர்

திருகோணமலை செப். 12

திருமலைக்கும் கந்தளாய்க்கும் இடையில் 98 ஆம் கட்டையில் பஸ்ஸில் வந்த (1,பெண் 2 ஆண்கள்)மூன்று தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

(இ- 150)

### டிராக்டர் சாரதி பற்றி தகவல் இல்லை

தம்பலகாமத்தைச் சேர்ந்த ஜெயம் (30 வயது)என்னும் டிரக்டர் சாரதி இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

ஆனால் இன்றுவரை இவர் பற்றிய தகவல் ஒன்றையும் பெறமுடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.(இ-150)

### வீனஸ் எவரெஸ்ட் சாம்பியன்கள்

கோப்பாய், செப் 12

ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகமும், புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகமும் இணை சாம்பியன்களாயின.

இப்போட்டிகளில் 20க்கும் மேற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்டன.

(சி-72)

### சங்கிலியை அறுக்க முயன்றூராம்

இருபாலை கிழக்குப் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் சங்கிலியை அறுக்க முயன்றூராம் ஒருவர்.

வீதியில் சென்று கொண்டிருந்த இளைஞர்களினால் பிடிக்கப்பட்டு இவர் அமைதிப்படையினரிடம் ஒப்படைக்கப் பட்டார். (சி-72)



காரைநகரில் மூன்று நாள் கம்பன் விழா சமீபத்தில் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. கம்பன்விழா நிகழ்ச்சிகளை காரைநகர் பிரம்மஸ்ரீ பொன் குமாரசாமி குருக்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைககிறார். அருகில் அகில இலங்கை கம்பன் கழக செயலாளர் ஜெயராஜ் காணப்படுகிறார். (இ)

தமிழினம் மீண்டும் உயர்ச்சி பெற

# உயர்பண்புகள் ஊனோடும் உயிரோடும் செறிய வேண்டும்

## ''புத்தெழில்''வெளியீட்டில் உரை

கோப்பாய் செப் 12

ஈழத் தமிழினம் மீண்டும் எழுச்சியும் ஏற்றமும் புகழும்பெறவேண்டுமானால் இலக்கியத்தில் காணப்படும் இவ்வுயர் பண்புகளெல்லாம் அவர்களின் ஊனோடும், உயிரோடும், உதிரத்தோடும் உணர்வோடும் கலந்து செறிய வேண்டும்.

அச்சுவேலி குகன் கல்வி நிலையத்தில் நடைபெற்ற புதுவை தமிழ் சங்கத்தின்''புத்தெழில்'' மாத சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரையாற்றிய நூல் ஆசிரியர் திரு. மு. திருஞானசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இலக்கியத்தில் காணப்படும் உயர் பண்புகள் நல் வாழ்வின் வித்துக்களே ஆகும்.

இம்முத்துக்களை சாதாரண மக்களும் விளங்கக்கூடிய வகையில் இனிய தமிழில் இலகு நடையில் இந்நூலை வெளியிட்டுள்ளோம்.

சுய கௌரவத்துக்காக நாம் வாழாது சமுதாய நலனுக்காக நாம் வாழ வேண்டும்,

எனவே புதியதொரு பாதையில் இப் ''புத்தெழில்'' பவனிவர உங்களின் ஆதரவை நாடி நிற்கிறேன்.

இப்படி அவர் கூறினர்

விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய ஆசிரியர் ரி. வரதராசன், மாணவர்களின் திறமைகளை இவ்வாறான நூல்கள் மூலம் நாம் வெளி உலகுக்கு கொண்டுவர முடியும் என்றார்.

ஏ. எஸ். சத்தியநாதன் தமது உரையில் சமகாலப்போக்கில் இந்நூல் எவ்வாறு அமைய வேண்டும் என்பது முக்கியம். இந்நூலில் உள்ள ஒவ்வொரு கதைகளிலும் விடுதலை உணர்ச்சிதான் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்றார்.

செல்வி கே. பத்ரா கவிதை மூலம் வாழ்த்து தெரிவித்தார்.

இந்நூலின் முதற் பிரதியை அச்சுவேலி ப.நோ. கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. கமலநாதன் பெற்றார்.

இரண்டாவது பிரதியைபு அச்சுவேலி மினிபஸ் சங்க தலைவர் எஸ். மதனசேகரம் பெற்றார்.

மூன்றாவது பிரதியை கல்வி நிலைய மாணவி கே. பத்ரா பெற்றார்.

புதுவை தமிழ் சங்க செயலாளர் திரு. சி. துரைராசாவின் நன்றி உரையுடன் விழா இனிது நிறைவு பெற்றது.

(இ-72)

### விளையாட்டு மாணவருக்கு நற்பண்புகளை வளர்க்கிறது

கொடிகாமம். செப் 12

மாணவர்களை விளையாட்டு பூரணத்துவமுடையவர்களாக ஆக்குகிறது. துணிவு, மனோவேகம், சக்தி, ஒற்றுமை முதலான பண்புகளையும் வளர்க்கிறது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இல்ல மெய் வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி நகரசபை விசேஷ ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு க.சி. குகதாசன் தலைமையில் விளையாட்டுப் போட்டி வெகுசிறப்பாக நடைபெற்றது.

திரு நவரத்தினராசா தொடர்ந்து பேசும் போது கல்விதான் சிற் [illegible] சமுதா[illegible]யத்துக் குரிய வருக கீழ்ப்படிவுள்ளவருக அமைக்கின்றது.

கல்வியை விலைகூறி விற்பதாக இருக்கக் கூடாது. நல்ல சமுதாயத்தை உருவாக்கும் வகையில் கல்வி வளம் பெறவேண்டும் என்றார்.

கல்லூரி அதிபர் திரு. குகதாசன் தனது தலைமையுரையில் சுற்றிவளைப்பு நடந்தாலும் போட்டியை நடத்த வேண்டும் என்ற உறுதியோடு என்னுடன் சகலரும் காட்டிய ஒத்துழைப்புக்கு நன்றி பாராட்டுகிறேன் என்றார்.

போட்டியில் தாமோதரம் இல்லம் 212 புள்ளிகளையும், நேரு இல்லம் 817 புள்ளிகளையும், ஸ்ரீ சுமங்கலா இல்லம் 148-1/2 புள்ளிகளையும் பெற்று முறையே 1-ஆம் [illegible] இடங்களைப் பெற்றன. (இ-7)

### கிளிநொச்சியில் பயிற்சிக்கான கருத்தரங்கு

கிளிநொச்சி இலங்கைத் தமிழ் ஆசிரியர்சங்கம் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து அதிபர் தரம் 1, 2, 3 ஆகியவற்றுக்கான பரீட்சைக்குப் பயிற்சிக் கருத்தரங்கை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடத்தமுன் வந்துள்ளது.

நாளை 13 ஆம் திகதி இக்கருத்தரங்கை கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் ஆரம்பித்துவைப்பார்.

இதனைத் தொடர்ந்து 21ஆம், 22ஆம், 27 ஆம், 28ஆம் திகதிகளிலும் அக்டோபர்மாதம்4ஆம், 5ஆம் திகதிகளிலும ஏழு நாட்களுக்குகருத்தரங்கு நடைபெறும்.

தினமும் பிற்பகல் 12-30க்கு ஆரம்பமாகி 4 மணி வரை நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கல்வி அதிகாரிகளும் விரிவுரை நடத்துவர்.

பயிற்சிபெறும் ஆண் பெண் பயிற்சியாளர்களுக்கு தங்குமிடவசதிகள் செய்துகொடுக்கப் படும் என கிளிநொச்சிக்கிளைச் செயலாளர் திரு. கனகமகேந்திரா உதயனுக்குத் தெரிவித்தார். (இ-76)

# ஆத்மீக தேவைகளைப் பூர்த்தி செய்வது பெரும் தொண்டு

கரவெட்டி, செப்.12

உலக நாடுகளுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்புகிடைக்கப்பெறுவது பெரும் பேறாகும். அதுவும் மக்களின் ஆத்மீக தேவைகளைப்பூர்த்தி செய்வது மிகச் சிறந்த தொண்டாகும்.

கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபைப் போதகர் வண. எஸ். கதிர்காமர் இப்படிக் கூறினார்.

திருநிலைப்படுத்தப்பட்ட எம். பி. ஞானரத்தினம் அடிகளாருக்கு வதிரி புனித அந்தோனியார் ஆலய மைதானத்தில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் போதகர் உரையாற்றினார்.

சட்டத்தரணி வி.மகாலிங்கம் பேசும்போது: துறவு என்பது தியாகம் கலந்த ஒரு செயல் என்றார். கத்தோலிக்க துறவிகள் இலங்கையில் ஆற்றிய கல்விப் பணிகளைப் பாராட்டினார்.

திரு. ஆர். ஈ.ஆனந்தராசா பேசுகையில் கத்தோலிக்க தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுள் ஒருவரையாவது திருச்சபைத் தொண்டுக்கு அர்ப்பணிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வதிரி திருஇருதயக்கல்லூரி அதிபர் திரு சி.வின்சென்ற் உட்படப் பலர் உரையாற்றினர்.

திரு.ஜி.எம்.தவராஜா நன்றியுரை கூறினார்.

வணபிதா ஆபரணம் சிங்கராயர் அடிகளாரும் விழாவில் கலந்துகொண்டார், (இ-70)

### நீர்வேலி கொத்தணி அதிபர்

கோப்பாய் மகாவித்தியாலய அதிபரும், இருபாலை நலன்புரிச் சங்க போஷகரும் ஆகிய திரு. அ. கனகசுந்தர் தற்போது பதவி உயர்வு பெற்று நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபராகவும் நீர்வேலி பாடசாலைகளின் கொத்தணி அதிபராகவும் கடமை ஏற்றுள்ளார்.

(இ)

## பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் தோ. லோகதர்ஷன்

12-9-1988

வட்டு – கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த செல்வன் தோத்திரலிங்கம் லோகதர்ஷன் தனது முதலாவது பிறந்ததினத்தை வவுனியாவில் அப்பப்பா வீட்டில் மிக விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அப்பா, அம்மா, அப்பப்பா, பெரியப்பா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், சித்தப்பாமார், அத்தைமார், சித்திமார், உறவினர், நண்பர் கள்நீடுழி வாழவாழ்த்துகின்றார்கள்.

(6347)

உ
சிவமயம்

## ★ திருமணத் திருமுகம் ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான திருவள்ளுவர் ஆண்டு 2019 ஆவணித் திங்கள் 29ஆம் நாள் (14-9-88) புதன்கிழமை காலை 9-00 மணி முதல் 10-30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எமது புதல்வன் திருநிறை செல்வன் **லக்ஸ்மன்** (முகாமையாளர், செல்லமகால் படமாளிகை, கொழும்பு) அவர்களுக்கும் | ★ | எமது புதல்வி திருநிறை செல்வி **ஜெயகுமாரி** (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) அவர்களுக்கும் |
|---|---|---|

நல்லூர் சிவன் கோயிலில் திருமணம் நடைபெறத் திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றம் சூழ வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி த. பத்மநாதன்
290, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி எஸ். நடராசா
36, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(6402)


கருங்கூந்தலே கண்ணுக்குக்கவர்ச்சி




நரை கண்டவுடன் நொடிப்பொழுதில் கருமையாக்கி நிரந்தர இளமைத் தோற்றத்தைப் பெற இதோ

பீகொக்

கூந்தல் சாயம்

யப்பானிலிருந்துநேரடியாக இறக்குமதி செய்யப்படுகின்றது!

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளத்தொடர்புகொள்ளுங்கள்!

விலைரூபாய் 50/=க்குமேல்

சந்தைப்படுத்துவோர்

சக்தி (பிறைவேட்) லிமிட்டெட்

6.26.2ம் மாடி, மத்தியகொழும்பு சுப்பர் மார்க்கெட், கொழும்பு:11

Colombo Central Super Market. Colombo:11


LANKA COMMERCIAL ARTISTS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்த உற்சவம்

கல்முனை செப் 12 பாண்டிருப்பு திரௌபதை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (இ)

## அந்தியேட்டி நினைவுநாள்



செல்வன் செல்லையா
யோகேஸ்வரன் அவர்கள்

தாயின் மடியில் 03-07-1972 — நீரின் அடியில் 10-07-1988


எம் இல்லத்தில் தினம் ஆனந்தகீதம் இசைத்து இன்று எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மறைந்துவிட்ட அறிவுச்சுடருக்கு எம் ஆராதனைகள்!

எமது வாழ்வில் கண்ணனது நினைவுகள் பதித்து விட்ட அன்புச் சுவடுகள் ஆயிரமாயிரம் ஆண்டுகள் சென்றாலும் எம் இதயத்தினை விட்டு என்றும் அழியாது— அழியாது!

உன் நினைவுகளுடன்,
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.
வீமன்புலம,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி. (6460)

## ஓராண்டு நிறைவு நினைவஞ்சலி

கிளிநொச்சி
மாணவர் இயக்கப்பொறுப்பாளர்
**வீரவேங்கை ராஜேந்தர்**



செல்வன் பகீரதன் ஜெகதீசன்
(காங்கேசன்துறை)

தாயின் மடியில்: 28 - 11 - 1965 — அநியாய அழிப்பில்: 12 - 09 - 1987

புரட்சிப் பொய்கையிலே
பூத்திட்ட புதுமலரே!
புனித மண் மீட்கப்
புறப்பட்ட வேங்கை நீயே!
புன்மைக்குணம் கொண்டார்
புழுதியிலே சிந்தவைத்த
குருதிச் சிவப்பினிலே
கொள்கையுரம் குமுறிவரும்;
கொடுமை விலங்கொடியும்;
குனிந்த தலை நிமிரும்;
குணக்குன்றே! நீ மகிழ்வாய்!

உன் நினைவைத் தாங்கி நிற்கும்
அப்பா, அம்மா,
தம்பி, தங்கைமார்,
உறவினர், நண்பர்கள்.

(6462)

யாழ் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில்

# கம்பியூட்டர் கல்வி உட்பட நான்கு புதிய பயிற்சிகள்

### புதிதாக 10 கம்பியூட்டர்கள் தருவிக்கப்பட உள்ளன

யாழ்ப்பாணம், செப் 12
யாழ். திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் நான்கு புதிய பயிற்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. அவையாவன;-

★ சம்பியூட்டர் கல்வி,
★ சட்ட பட்டதாரிப் படிப்பு (LL.B)
★ ஆரம்பப் பாடசாலை கல்விக்கான சான்றிதழ் பயிற்சி (Certificate in Pre. School Education)
★ ஸ்தாபன தலைமைத்துவத்துக்கான சான்றிதழ் பயிற்சி (Certificate in Entrepreneur Ship)

யாழ் மாவட்ட மாணவர்களின் எதிர்காலத் தேவைகளையும், நலனையும், முன்னேற்றத்தையும் உத்தேசித்து இந்தப் புதிய பாடத்திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

யாழ். திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் கல்வித் திட்டம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கிறது. 'கம்பியூட்டர் அறிவியல் பயிற்சி' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் இந்தக் கல்வித் திட்டத்துக்கென பத்து புதிய கம்பியூட்டர்கள் விரைவில் யாழ் திறந்த வெளிப் பல்கலைக்கழகத்துக்கு கிடைக்கவிருக்கின்றன.

யாழ் மாவட்டத்தில் சம்பியூட்டர் கல்விக்கென மாணவர்கள் பெருந்தொகையான பணத்தை செலவிட வேண்டியிருக்கிறது.

எனவே யாழ்மாவட்ட மாணவர்களுக்கு குறைந்த செலவில் கம்பியூட்டர் கல்வியை வழங்கும் விதமாகவே யாழ் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் கம்பியூட்டர் அறிவியல் பயிற்சி ஆரம்பமாக இருக்கின்றது.

**அக்டோபரில்**

இந்தப் பயிற்சிக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டு இருக்கிறது.

இந்தப் பயிற்சி வகுப்புகள் ஆறுமாத காலம் நடைபெறும். மாணவர்களிடம் இருந்து பதிவுக் கட்டணமாக இருபத்தைந்துரூபாவும், ரியூசன் கட்டணமாக எழுநூற்றைம்பது ரூபாவும் அறவிடப்படும்.

இந்தப் பயிற்சியை மேற்கொள்வதற்கு மாணவர்களுக்கு ஆங்கில அறிவு இருத்தல் அவசியமாகும்.

இந்தப் பயிற்சியின் இறுதியில் பரீட்சைகள் எதுவும் நடத்தப்பட மாட்டாது. சான்றிதழ்களும் வழங்கப்படமாட்டாது.

கம்பியூட்டர் சம்பந்தமான அடிப்படை அறிவையும், அவற்றின் இயக்கங்கள் சம்பந்தமான அறிவையும் மேலும் கம்பியூட்டர்கள் பற்றி மேலதிக விரிவான அறிவைப் பெறுவதற்கான கடினமான பயிற்சி நெறிகளைப் பின்பற்ற மாணவர்களைத் தயார்படுத்தும் நோக்கத்துடனேயே யாழ் திறந்த வெளிப் பல்கலைக்கழகம் இந்தப் புதிய பயிற்சி நெறியை அறிமுகப்படுத்தவிருக்கிறது.

இதே வேளையில் யாழ் மாவட்டத்தில் சட்டப் படிப்பை பயில்வதற்கு மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதால், யாழ் திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தில் சட்ட பட்டதாரிப் படிப்பை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் ஆரம்பப் பாடசாலைக் கல்விக்கான சான்றிதழ் ஸ்தாபனத் தலைமைத்துவத்திற்கான சான்றிதழ் ஆகிய புதிய பயிற்சி நெறிகளும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. (ஒ-ஐ)

# மக்கள் போராட்டம் மூலம் பூஸாவில் உள்ளவர்களை விடுவிக்கலாம்

### விடுதலையாகி வந்தவர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், செப் 12
பொதுமக்களின் போராட்டங்கள் மூலமும், சிறை மீண்டவர்கள் நடத்தும் போராட்டம் மூலமுமே தமக்கு விடுதலை கிடைக்க முடியும் எனப் பூஸாவில் உள்ளவர்கள் நம்புகிறார்கள்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பூஸா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்டு பூஸா சென்ற யாழ். குழுவோடு வந்த இருவரில் ஒருவரான குருநகரைச் சேர்ந்தசின்னு கிருஷ்ணா (வயது 27) இவ்வாறு தெரிவித்தார்.

இவர் 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி மன்னார் கடலில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

23 பேருடன் தலைமன்னாரில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று கொண்டிருந்த பொழுதே தாம் கைதானதாக அவர் கூறினார்.

இராணுவ முகாமில் ஏற்பட்ட அனுபவம் பற்றி அவர் தெரிவித்ததாவது:-

கைது செய்யப்பட்ட என்னையும் மற்றையோரையும் கடற்படையினர் முதலில் தள்ளாடி இராணுவ முகாமில்ஒப்படைத்தனர்.

என்னுடன் கைதானவர்களில் ஐந்து பேரை இயக்கம் என குற்றம் சாட்டி சி. ஐ. டிப் பிரிவினர் கொண்டு சென்றார்கள்.

பின்னர் என்னுடன் எஞ்சிய 18 பேரையும் பூஸா முகாமுக்கு கொண்டு சென்றார்கள்.

தள்ளாடி முகாமில் நான் வைக்கப்பட்டிருந்த சில நாட்களில் மட்டும் ஏராளமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டேன்.

என் உடம்பில் மின்சாரம் பாய்ச்சப்பட்டது. சப்பாத்துக் கால்களாலும் பொல்லுகளாலும் "நீ புலியா" எனக் கேட்டுத் தாக்கப்பட்டேன்.

குடிக்கத் தண்ணீர் கேட்டால் அசுத்த நீரையும் கான் தண்ணீரையும் சிறுநீரையும் குடிக்கத் தருவார்கள்.

அவற்றினால் தலையில் ஊற்றி முழுக்காட்டுவார்கள். இந்த வேதனைகளால் நான் பலமுறை செத்துப் பிழைத்தேன்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பு எமக்கு விடுதலை கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம்.

நாம் எதிர்பார்த்தது ஏமாற்றமாகவே முடிந்தது.

தடுப்பு முகாமில் இருந்த எமக்கு சவர்க்கரமோ; பற்பொடியோ, எதுவுமே வழங்கப்படுவதில்லை.

இவ்வாறு அவர் தமது அனுபவத்தைத் தெரிவித்தார்.

(ஒ-9-10)

# மேற்படிப்பு தொடர்தற்கு

### சுருக்கெழுத்துக் கலைமிகவும்உதவும் கோட்டக் கல்லூரி அதிகாரி உரை

யாழ்ப்பாணம், செ. 12
"இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் டமது மேற்படிப்புகளைத் தொடர்வதற்குச் சுருக்கெழுத்துக்கலை மிகவும் உதவும். குறிப்பாக ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சுக்கலையில் திறமையானவர்களுக்கு இலங்கையில் மட்டுமின்றி வெளிநாட்டிலும் அதிக எதிர்பார்ப்பு உண்டு. இம் மன்றம் கடந்த 26ஆண்டுகளாக ஆற்றிவரும் பணி பாராட்டத் தக்கது"

வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி பெரியதம்பி புலோலி ஞானசம்பந்தர் கலைமன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து வகுப்பு ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

திட்டமிடல் ... சரத்தினம் பேசுகையில் இங்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் திட்டமிடல் அமைச்சின் மூலம் தராதரப் பத்திரம் வழங்கவும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் வழி செய்யப்படும் எனக் கூறினார்.

நெல்லை க. பேரன் பேசுகையில் சுருக்கெழுத்து தட்டச்சுக்கலையில் பயிற்றப்பட்டவர்கள், நாடாளுமன்ற அறிக்கையாளர்கள், பத்திரிகையாளர்கள், அந்தரங்கச் செயலாளர்கள் போன்ற பதவிகளைத் திறம்பட ஆற்றி வருகின்றனர் எனச் சொன்னார்.

திருவாளர்கள் கோ. இராசரத்தினம், கு. சிவச்சந்திரதேவன், ஆசிரியர் சத்தியசீலன் ஆகியோரும் உரையாற்றினர். (இ)

பூநகரியில் அகதிகள்

# நிவாரணம் வழங்க ஏற்பாடு

பூநகரி, செப். 12
இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வன்னேரிக் குளத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து பூநகரியில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை பூநகரி பிரசைகள் குழு செய்து வருகிறது.

பிரசைகள் குழு எடுத்த கணிப்பின்படி, பூநகரியில் 275 வன்னேரி அகதிக் குடும்பங்கள் தங்கி இருப்பது தெரியவந்துள்ளது.

இவர்களில் ஒரு பகுதியினருக்கு ஏற்கனவே பூநகரி சர்வோதய நிலையம் உதவிகளைச் செய்துள்ளது.

பிரஸ்தாப அகதிகளுக்கு உணவுப் பொருள்களை வழங்க கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும் முன் வந்துள்ளது.

(ஒ)

# கிட்டுவின் சகோதரர் விசாரணை

வடமராட்சி, செப் 12
தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு கிட்டுவின் சகோதரரான திரு. சதாசிவம் காந்திதாசன் அமைதிப் படையினரால் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறையில் உள்ள அவரது அச்சகத்திலிருந்து புலோலி முகாமுக்குக் கூட்டிச்செல்லப்பட்டார்.

சுவரொட்டிகள் சம்பந்தப்பட்ட விசாரணைக்காகவே இவர் கொண்டு செல்லப்பட்டதாகவும் சில மணித்தியால விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டதாகவும் அறிய வருகிறது. (ஒ-160)


NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.
89 A/L
DAY CLASSES
ஆரம்பம் 14-09-88
புதன் காலை 7-30 மணி

| | |
|---|---|
| ZOOLOGY | 7-30 — 8-30 a.m. |
| CHEMISTRY | 8-30 — 9-30 a.m. |
| PHYSICS | 9-30 — 10-30 a.m. |
| BOTANY | 10-30 — 11-30 a.m. |
| PURE & APPLIED MATHS | 10-30 — 12-30 p.m. |

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்
★ கடந்த ஆண்டுகளில் முழுப்பாடத் திட்டமும் குறித்த காலத்தில் முடித்த ஒரேகல்வி நிறுவனம். ★ (C-117)

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
யாழ் நகரில் முதல் முதலாக
எமது நிறுவனமாகிய,
MEERA TRAVEL'S
K. K. S. வீதி, சுன்னுகம்.
இச் சலுகை முறையை அறிவிக்கின்றோம்
✶ எம்மிடம் கடவுச்சீட்டு (Passport)
பெற்றுக்கொள்ள பதிவு செய்பவர்களுக்கு கீழ்க் கண்டவை இலவசமாக வழங்குகின்றோம்,
(1) விண்ணப்பப்படிவம். (Passport Form)
(2) பதிவுக்குரிய முத்திரை (ரூபா. 200/- பெறுமதி)
(3) Passport Size படம் இலவசமாக எடுத்துக் கொடுக்கப்படும்.
(4) Passport பழுதடையாமல் போடப் படும் பிளாஸ்டிக்கவர்.
✶ இந்தியா விசா (3 மாத காலம்)
✶ வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்பவர்களும்/ இடம் பெயர்ந்து செல்பவர்களும் எம்மிடம் பதிவு செய்தால் கடவுச்சீட்டு (Passport) இலவசமாகச் செய்து தரப்படும்.
✶ குறைந்த செலவில், விரைவில் உங்கள் பிரயாண ஒழுங்குகளைச் செய்து முடிக்க எம்மை நாடவும்.
விபரங்களுக்கு:-
கிருபா வீடியோ சென்ரர்
K. K. S. வீதி, சுன்னுகம்.
(C/ 135)

NEW MASTER INSTITUTE
1st Lane, Power House Road, JAFFNA.
89 DAY CLASSES
கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 12-09-88 திங்கள் காலை 7-30 மணி

| | | |
|---|---|---|
| Economics | — 7-30 | திரு. சின்னத்தம்பி |
| Accounts | — 8-30 | திரு. ராஜன் |
| Commerce | — 9-30 | திரு. தேவா |
| Logic | — 10-30 | திரு. சந்திரராஜா |
| Accounts | — 11-30—2-30 (Monday) | திரு. யோகராஜா |

(C-113)


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
அமைப்பு வேலைக்கான

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**அட்டவணை**

| இல. | வேலை விபரம் | கேள்விப்பிணைப் பணம்மீளளிக்கப் படக் கூடியது; | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கப்பட முடியாதது) | ஒப்பந்தகாரர் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 01. | யாழ். குருநகர் சந்தையில் மேற்குப் புறமாக உள்ள கடைகள் இல: 9, 10.11.12. க்கு கூடம் அமைத்தல். | 500/- | 100/- | 100,000/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றமராமத்துப்பொறியியலாளரிடமிருந்து 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கேள்விக்கு எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம் கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வி. கே. சிவஞானம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(C/160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

உறுபொருளும் உலகு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

**பொருள்:**

இறையாக வந்து சேரும் பொருளும் சுங்கமாகக் கொள்ளும் பொருளும் தன்பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும் அரசனுடைய பொருள்களாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
12-09-1988 க. பெ. இல 23


## எங்கும் புறக்கணிப்பு!

நீண்ட கால இடைவெளியின் பின்னர் தென்னிலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் மீண்டும் இன்று திறக்கப்படுகின்றன. மாணவர்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கும் — அரசாங்கத்துக்கும் — இடையில் இருந்த பிணக்குகள் காரணமாக அந்தப் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவரின் கல்வி பல மாதங்களாக தடைப்பட்டிருந்தது.

ஆனால், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மட்டும், இப்பகுதியில் உள்ள இராணுவச் சூழ்நிலையின் மத்தியிலும் தடங்கல் இன்றி இயங்கி வருகிறது தென்பகுதிப் பல்கலைக்கழகங்களோடு ஒப்பிடுகையில், பெரும் இடர்ப்பாடுகள், வசதிக் குறைவுகளின் மத்தியிலும் யாழ்.பல்கலைக்கழகம், மாணவர்களின் கல்விக்கு மிகப்பெரும் அளவில் பாதிப்பு ஏற்படாமல் இயங்கி வருவது பாராட்டுதலுக்கு உரியதாகும்.

அதுவும் தேவையில்லாத மிரட்டல்கள், வேண்டாத தலையீடுகள் எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்து, எதிர் நீச்சலடித்து நிர்வாகிகள் யாழ் பல்கலைக்கழகத்தை இயக்குவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கடந்த ஐந்து வருட காலத்தை ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது, யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நாட்கள் குறைந்து இருந்ததும், அதனால் மாணவர்களின் கல்விக் காலத்தில் இழப்பு ஏற்பட்டு மேலதிக மாதங்களைச் செலவிட ஏற்பட்டதும் மறக்க முடியாதவை.

எனினும் —

இப்பகுதித் தமிழ் மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையையே நடத்த முடியாத இக்கட்டான காலத்தில் பல்கலைக்கழகத்தில் கல்விநெறிகள் நடப்பது பெரும் பாக்கியம் என்றே கருத வேண்டும்.

அதுவும், கடந்த அக்டோபர் மாதத்தில் பல்கலைக்கழகத்துக்கு ஏற்பட்ட பாரிய சேதத்தின் பின், அங்கு பயிற்சி நெறிகள் தடங்கல் இன்றி நடந்து வருவதற்கு நிர்வாகிகளினதும், விரிவுரையாளர்கள், பேராசிரியர்களினதும் முயற்சியும் ஒத்துழைப்புமே காரணங்கள் என்று துணிந்து கூறலாம்.

அக்டோபர் பாதிப்பினால் சேதமுற்ற கட்டடங்களை யாழ். பல்கலைக்கழகம் தனது சொந்த நிதி வளங்களைப் பயன்படுத்தியே திருத்தியதாகவும், உள்நாட்டு வெளிநாட்டு உதவிகள் இதுவரை கிடைக்கவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

அக்டோபர் சேதங்களைப் புனரமைக்க புனர்வாழ்வு அமைச்சு ஊடாக நிதிபெற்றுத் தருவதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறியிருந்த போதிலும் அரசாங்கத்திடமிருந்து இதுவரை ஒரு "வெள்ளைச்சல்லியாவது" யாழ் பல்கலைக்கழகத்துக்கு கிடைக்கவில்லை! இது கண்டிக்கப்பட வேண்டியது, அம்பலப்படுத்தப்பட வேண்டியது.

வடக்கின் ஒரேயொரு பல்கலைக்கழகத்தில் மாணவர் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதில் அரசுக்கு அக்கறை இல்லை என்பதையே இது காட்டுகிறது. வருடம் ஒன்றாகியும் ஒரு சதம் தானும் உதவவில்லை என்றால் அது அரச தரப்பில் காட்டப்படும் பாரபட்சத்தையும் சிரத்தை இன்மையையுமே எடுத்துக்காட்டுகிறது.

நிவாரணம், புனர்வாழ்வு புனர்நிர்மாணம் நூற்றுக்குநூறு வீதம் தேவைப்படும் தமிழ்ப்பகுதிகள், அவை சம்பந்தப்பட்ட செயலாக்கத்தில் எந்தளவுக்குப் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை இப்பத்தியில் பலப்பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளோம், விரித்துக் காட்டியுள்ளோம்.

புனர்நிர்மாணம் உயர்கல்வித்துறைக்குத் தேவைப்பட்ட போது கூட அந்தப் புறக்கணிப்பு நிறுத்தப்படவில்லை.

யாழ் பல்கலைக்கழகம் தனது சொந்த நிதி வளத்தைக் கொண்டு புனரமைப்பு வேலைகளைச் செய்து விட்டு இப்போது நிதிவளம் குன்றிக் கஷ்டப்படுகிறது.

எங்கும், எதிலும் புறக்கணிப்பும், பாரபட்சமும், கொடுமைப்படுத்தலும், உரிமையில்லாமையும் தான் தமிழர் வாழ்க்கையாகி விட்டது.

இவ்வாறான புறக்கணிப்புகள், பாரபட்சங்கள், பாராமுகங்கள் எடுத்துக் காட்டப்பட வேண்டும், பிரபல்யப்படுத்தப்பட வேண்டும்.

அப்போது தான் ஈழத்தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் எவ்வாறு ஒதுக்கப்படுகிறார்கள், அவர்களின் உரிமைப் போராட்டம் எந்தளவுக்கு நியாயமானது என்பதை வெளி உலகம் புரிந்து கொள்ள முடியும்.

ராமாவரம் தோட்டம் சென்று

# ஜானகியைச் சந்தித்தார் 'பண்ருட்டி'; 'ஜா' அணியில் சேர விண்ணப்பம்

சென்னை, செப். 11

ஜா அணித் தலைவி ஜானகி அம்மாளை ஜெ அணியில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் ராமாவரம் தோட்டத்துக்குச் சென்று சந்தித்தார்.

தங்கள் குழுவை எப்படியும் கட்சியில் சேர்த்துக்கொள்ளும்படி அவர் ஜானகி அம்மாளைக்கேட்டுக்கொண்டார்.

பேச்சுக்கள் 2 மணித்தியாலங்கள் நடந்தன. முன்னாள் அமைச்சர்கள் விரப்பன், ராகவானந்தம், மாதவன், முத்துச்சாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின் ஜானகி செய்தியாளர் மத்தியில் பேசினார். அப்போது அவர் சொன்னதாவது:

எம். ஜி ஆரின் தம்பிகள் என்னைச் சந்தித்தனர். எம். ஜி ஆர். கட்சி மீண்டும் அமைப ஒத்துழைப்புத் தருவதாகச் சொன்னார்கள்.

என்னை நம்பி வருபவர்களுக்கு நானும் நம்பிக்கைக்கு உரியவளாக இருப்பேன் — இப்படி அவர் சொன்னார். (எ)

## அணிசேரா இயக்க உச்சிமாநாடு யூகோஸ்லேவியாவில் நடைபெறும்

நிக்கோஸியா, செப். 11

அணிசேரா இயக்கத்தின் அடுத்த உச்சிமாநாடு யூகோஸ்லேவியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இதற்கு யூகோஸ்லேவியா அரசும் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியா, சைப்பிரஸ் ஆகிய நாடுகள் அடுத்த உச்சி மாநாட்டை நடத்துவதில் ஆர்வம் காட்டிவந்தன. சமரச முயற்சியாக யூகோஸ்லேவியா நாட்டை அணிசேரா இயக்க வெளியுறவு அமைச்சர்கள் தெரிவு செய்தனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

1961ஆம் ஆண்டிலும் அணிசேரா இயக்க உச்சிமாநாடு யூகோஸ்லேவியாவில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது (எ)

**வெளி உலகில்**

### ஐ. நா. செயலரின் கார் தாக்கப்பட்டது

ஹேக். செப் 11

ஹேக்கில் உள்ள நீதி மன்றக் கட்டடத்தின் முன்னால் வைத்து ஐ நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலரின் கார் தாக்கப்பட்டது.

குர்டிஷ் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் காரை தடி ஒன்றினால் தாக்கிச் சேதப்படுத்தினர்.

உலக நீதிமன்றத்தில் சர்வதேசச்சட்டம் பற்றி பொதுச் செயலாளர் உரையாற்ற வந்தவிடத்தில் இச் சம்பவம் இடம் பெற்றது. (எ)

## பலஸ்தீனியரின் கிளர்ச்சி 10 மாதங்களாக நடக்கிறது

ஜெருசலம் செப் 11

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் நேற்று பலஸ்தீனியர் நடத்திய கிளர்ச்சியின் போது இரண்டு அரபுக் குழந்தைகள் உயிரிழந்தனர்.

இஸ்ரவேலியப் படைகள் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வெடிக்க வைத்தபோது மூச்சுத் திணறி அவர்கள் மரணமானார்கள்.

அரபுப் பிரதேசங்களில் தாயகம் மீட்கும் கிளர்ச்சியை பலஸ்தீனியர்கள் கடந்த 10 மாதங்களாக நடத்தி வருகின்றனர். (எ)

## ஈராக்-ஈரான் அமைச்சர்கள் நேரில் சந்தித்துப் பேச்சு

ஜெனீவா, செப் 11

ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி வேலாயடி, ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் ஆகியோர் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் நேற்று முதல் தடவையாக நேருக்கு நேர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

யுத்த நிறுத்தம் தொடர்பான அம்சங்கள் பற்றி இரண்டு அமைச்சர்களும் நடத்திய பேச்சுக்கள் மூன்றரை மணித்தியாலங்கள் வரை நீடித்தன.

பேச்சுக்கள் சுமுகமான முறையில் மட்டும் இடம்பெற்றன என்று ஐ நா. பேச்சாளர் தெரிவித்தார்.

இரண்டு அமைச்சர்களும் நியூயார்க்கில் மீண்டும் சந்தித்துப் பேசுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

★ இருதரப்புப் படைகளும் சர்வதேச எல்லைக்கு விலக்கப்பட வேண்டும்.

★ யுத்தக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

இந்த அம்சங்கள் குறித்தே ஐ.நா மேற்பார்வையில் இப்பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. (எ)

## இந்தியா— ஈரான் விமான சேவை மீண்டும் ஆரம்பம்

புதுடில்லி, செப் 11

ஈரானுடனான விமான சேவையை இந்தியா அடுத்த மாதம் 3 ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கவிருக்கிறது.

வளைகுடா யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து இவ்விமானச் சேவையை 1981 இல் இருந்து இந்தியா நிறுத்தி இருந்தது. (எ)

### வளைகுடா யுத்தம் ஈராக் ஜனாதிபதி எச்சரிக்கை

டுபாய், செப் 11

ஈராக் கப்பல்களைத் தடுத்து நிறுத்தி ஈரான் யுத்தக் கப்பல்கள் சோதனையிட்டால் மீண்டும் வளைகுடா யுத்தம் வெடிக்கும்

இப்படி ஈராக் ஜனாதிபதி சத்தாம் ஹுசேன் எச்சரித்துள்ளார். (எ)

### படகு கவிழ்ந்து 13 மாணவர் மரணம்

புதுடில்லி செப் 11

வடகிழக்கு இந்தியாவில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 13 பாடசாலை மாணவர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## பர்மா அரசு அறிவிப்பு; எதிர்க்கட்சிகள் நிராகரிப்பு

ரங்கூன், செப். 11

பல அரசியல் கட்சிகள் கலந்துகொள்ளக் கூடியதான நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை நடத்தப்போவதாக பர்மா அரசு அறிவித்திருப்பதை எதிர்க்கட்சித் தலைவர்கள் நிராகரித்தனர்.

தற்போதைய அரசு பதவி விலகி இடைக்கால அரசு ஏற்படுத்தப்படவேண்டும்; அதன் பின்னரே பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற தங்கள் கோரிக்கையை எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வற்புறுத்துகின்றன (எ)

### பாரதியார் நினைவு தினம்

சென்னை செப் 11

மகாகவி பாரதியார் நினைவு தினம் இன்று சென்னை நகரில் அனுஷ்டிக்கப்பட்டது.

## இன ஒழிப்பு நடவடிக்கையில் ஈராக் அரசு; சர்வதேசமன்னிப்புச் சபை கண்டனம்

குர்டிஷ் இன மக்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈராக் ஈடுபடுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்துள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபை விரைந்து தலையிட்டு ஈராக்கின் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்றும் மன்னிப்புச் சபை கோரியிருக்கிறது.

மன்னிப்புச் சபை தனது வேண்டுகோளில், குர்டிஷ் இன ஒழிப்பில் ஈராக் அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது.

குர்டிஷ் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கையாக ஈராக் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கத் தொடங்கியிருக்கிறது.

ஐ நா. வின் மனித உரிமை சாசனத்தை ஈராக் அரசு அப்பட்டமாக மீறி வருகிறது— என்று தெரிக்கப்பட்டுள்ளது. (எ)

மட்டக்களப்பு அமைதிப்படை

## புனர்வாழ்வுநிலையத்திலிருந்து தாய் குழந்தை உட்பட இருபது பேர் விடுவிப்பு

மட்டக்களப்பு செப் 12

மட்டக்களப்பு இந்திய அமைதிப்படை புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தகைக்குழந்தைதாய் உட்பட 20 பேர் பிரசைகள் குழு முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த வாரம் விடுவிக்கப்பட்ட இவர்களில் இருவர் பெண்மணிகளாவர்

விடுவிக்கப்பட்டவர்களில் முறக்கொட்டாஞ்சேனை வாலிபர் ஒருவரின் பெற்றோர் விடுதலை உத்தரவு பாஸ் பெறப்பட வேண்டுமென்று கோரினர்

விடுதலையானால் தம் மகனுக்கு பாதுகாப்பு இல்லை-இதனால் பொறுப்பேற்க முடியாது எனப் படையினரிடம் தெரிவித்தனர்

இதனை அடுத்து பாதுகாப்புக் கருதி அவரின் விடுதலை உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது. (ஒ-21)

## ஈழத் தமிழருக்கு விசா வழங்குவதில் பிரிட்டன் கடும் போக்கு

கொழும்பு, செப் 12

பிரிட்டனில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களின் விசா விடயத்தில் அந்த அரசாங்கம் தற்போது கடும் போக்கைக் கைக்கொள்வதாக அறிய வருகிறது.

இதனால் குறிப்பாக மாணவர்களாக விசா பெற்று தங்கியுள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்களாம். இவர்களுக்கு ஒரு வருடம் விசா வழங்கப்பட்டு பின்னர் நீடிக்கப்படுவது வழக்கம்.

தற்போது தங்களுடைய விசாவை நீடிக்கச் செல்லும் மாணவர்களிடம் அவர்களின் கல்வி, மற்றும் பகுதிநேர வேலை சம்பந்தமாக பல கேள்விகள் கேட்கப்படுகின்றனவாம்.

இவை சம்பந்தமாக திருப்திகரமான பதில் வழங்கப்படாத இடத்து அவர்கள் உடனடியாக நாடு திரும்பும்படி பணிக்கப்படுகிறதாம்.

இந்த முடிவை எதிர்த்து அப்பீல் செய்பவர்கள் அகதி முகாம் ஒன்றில் வைக்கப்பட்டு மீள் விசாரணையை எதிர் நோக்கியுள்ளார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அண்மைய போக்கினால் பாதிக்கப்பட்டு நாடு திரும்பிய தமிழ் இளைஞர் ஒருவர் மேற்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

ஏற்கனவே கடந்தசில காலமாக இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதராலயமும் கல்விக்காக இங்கிலாந்து செல்பவர் விடயத்தில் கடினமான போக்கைக் கடைப்பிடித்து வருவது தெரிந்ததே. (ஒ-3)

**சமய நிகழ்ச்சிகள்**

### இராஜகோபுர அத்திவார விழா

புங்குடுதீவு செப் 12

புங்குடுதீவு மேற்கு கிராஞ்சியம்பதி அருள்மிகு கந்தசுவாமி கோயில் இராஜகோபுர அத்திவாரவிழா இன்று 12 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 6.05 தொடக்கம் 6.40 மணி வரைக்கும் இடையில் நடைபெறும்.

இவ் விழாவுக்கு தர்மகர்த்தா ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு ப. கதிரவேலு தலைமை வகிப்பார். (சி)

### ஞானவைரவர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப்12

சரவணைக் கொட்டாங்காடு ஞானவைரவர் கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன் கிழமை நடைபெறும்.

இன்று மாலை நான்கு மணிக்குக் கணபதிபூஜையும், நாளை செவ்வாய்க் கிழமை வாஸ்துசாந்தி ... நடைபெறவுள்ளன. (ஒ-10)

## இரத்தச் சேமிப்பு அதிகரிக்காவிடில் நவீன உபகரணங்கள் கைமாறலாம்

### யாழ் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அச்சம்

யாழ்ப்பாணம், செப்12

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தச் சேமிப்பு நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படாதபட்சத்தில், அண்மையில் நற்கொடையாகக் கிடைக்கப் பெற்ற சில புதிய நவீன உபகரணங்களை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது

சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான இந்த நவீன உபகரணங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான நிதியத்திலிருந்து யாழ் இரத்த வங்கிக்கு அண்மையில் கிடைத்தன.

இந்த உபகரணங்களை குளிரூட்டு வசதிகள் உள்ள இடத்திலேயே பாதுகாப்பாக இயங்க வைக்க முடியும்.

அதனால் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் குளிரூட்டு வசதிகளை யாழ் ஆஸ்பத்திரியில் ஏற்படுத்துவதற்கான அங்கீகாரமும் அரசாங்கத்தால் கிடைத்திருக்கிறது.

இந்த உபகரணங்கள் பொருத்தப்பட்டதும் இரத்த வங்கியில் ஆகக் குறைந்தது நூறு பைந்து முதல் இருநூறு பைந்த் இரத்தம் வரை கையிருப்பில் இருக்க வேண்டும். அப்போதுதான் இந்த உபகரணங்களைப் பயன்படுத்த முடியும்.

ஆனால் தற்போது இரத்தவங்கியில் இருபது முதல் இருபத்தைந்து பைந்து இரத்தம் மாத்திரமே கையிருப்பில் இருக்கிறது இந்த நிலையில் புதிய உபகரணங்களைப் பொருத்தி இயங்க வைப்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறதென்று யாழ் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இந்த நிலை நீடிக்குமானால் சம்பந்தப்பட்ட உபகரணங்கள் மீண்டும் கொழும்புக்குக் கைமாறக்கூடிய அபாயமும் ஏற்படலாம்.

பொதுமக்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி இரத்தவங்கி திறமையாகச் செயற்பட பரந்த அளவில் இரத்ததானம் செய்தால் இப்போது கிடைத்திருக்கும் புதிய உபகரணங்களைக் காத்துக் கொள்ள முடியும்.

அத்துடன் மேலதிகமாக புதிய உபகரணங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ- ஐ)

## சுன்னாகத்தில் நாளை கோமாரிதடுப்பூசிஏற்றப்படும்

சுன்னாகம், செப். 12

நாளை செவ்வாய்க் கிழமை (13 ஆம் திகதி) சுன்னாகத்தில் கோமாரி தடுப்பூசி ஏற்றுதற்கானஒழுங்குகளை யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கம் செய்திருக்கிறது.

மேற்படி தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களின் விபரம் வருமாறு:-

சுன்னாகம் சூலானை வைரவர் கோயிலடியில் காலை 6-30 மணியிலிருந்து 7-30 மணி வரைக்கும், சுன்னாகம் தெற்கு பூதனார் கோயிலடியில் காலை 7-30 மணியிலிருந்து 8-30 மணி வரைக்கும், சுன்னாகம் வைரவர் கோயிலடியில் (சுன்னாகம் ரயில் நிலையம்) காலை 8-30 மணியிலிருந்து9-30 மணி வரைக்கும். (ஒ ஐ-27)

## மன்னாரில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல்

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிஉதவியுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளை அமைப்பதற்காக் கிடுகு, பனைமரங்கள், ஓடு, சிமெந்துபோன்றவற்றை வாங்க நிதிஉதவிவழங்கி வருகிறது.

அதனுடன் விவசாயிகளுக்கு விதைநெல் வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்படி சங்கம் மேற்கொண்டிருக்கிறது.

இதன் பொருட்டு இரண்டு ஏக்கருக்குத் தேவையான விதைநெல் வழங்குவதற்குவிண்ணப்பங்களை எதிர்வரும் 15-ஆம் திகதிக்குமுன் பெரும்போக உத்தியோகத்தரிடம் கையளிக்குமாறு சங்கம் கேட்டிருக்கிறது

அத்துடன்செயர்ஸ்தாபனம், சிறுவர்பராமரிப்பு நிதியம் போன்றவற்றின் நிதி உதவியுடன் பாதிக்கப்பட்ட சிறிய விவசாயிகளுக்கு உதவிவழங்கவும் சங்கம் முன்வந்திருக்கிறது. (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kailas Catarrah Oil
**கைலாஸ் பீனிசத் தைலம்**
கண், காது, மூக்கு, தொண்டை முதலியவற்றில் அரிப்பு ஓயாது தும்மல், கண்ணீர் வடிதல், நாசியிலிருந்து இரத்தம் வருதல் போன்ற 21 வகையான பீனிச வகைகளுக்கும் நிவாரணம் தரும்.
கிடைக்கும் இடம்
**க.செ. கைலாசம்பிள்ளைஅன் சன்ஸ்**
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

12 - 09 - 1988 திங்கட்கிழமை

Kailas Brahmi Hair Oil
**கைலாஸ் பிரம்மி கூந்தல் தைலம்**
இத்தைலத்தை தினமும் சிரசில் பாவித்துவந்தால் தலைமுடி நரைத்தல், தலைமயிர் உதிர்தல், தலைவலி, கண்ணீர் வடிதல், தும்மல், மூக்கு அரிப்பு முதலிய ரோகங்களுக்கு நிவாரணம் தருவதோடு கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், கருமையாகவும் வளரச் செய்யும்.
கிடைக்கும் இடம்
**க.செ. கைலாசம்பிள்ளை அன்'சன்ஸ்**
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## காணவில்லை

சிறுப்பிட்டி, வடக்கைச் சேர்ந்த கார்த்திகேசு அரியகுட்டி என்பவரை கடந்த வியாழக்கிழமை முதல் காணவில்லை. இவர் 80 வயதையுடைய மெலிந்த கட்டையான நரைத்ததலை தோற்றத்தையுடையவர். சாரமும், நீலநிற சேட்டும், ரோஸ் நிற சேட் (உள்ளேயும்) அணிந்துள்ளார். கையில் ரோச்லையிட்டும் வைத்திருப்பார். இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**S. தியாகராஜா**
சிறுப்பிட்டி வடக்கு,
படத்தடி ஒழுங்கை,
நீர்வேலி.

(6472)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சரவணையூர் வெற்றிவேலு பசுபதிப்பிள்ளை**

**தோற்றம்:** 10- 2- 1919 **மறைவு:** 25- 8- 1987

அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், எங்கள் ஒளிவிளக்காய் எம்மை எல்லாம் வழிநடத்திய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்
மருமகன்

(6415)

## நினைவஞ்சலி



**திருமதி சதாசிவம் செல்லம்மா**

**மறைவு: 13 - 8 - 88**

எங்கள் அன்பு மிளிர்தாயே!

எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயிலில் ஆழ்ந்த தாயே! எல்லோரதும் இதயங்களிலும் தோன்றிடாத்துணையாய் நின்றாய். துடிக்கும் துயரில் எங்களை தவிக்க விட்ட எங்கள் பாசப்பிணைப்பின் தெய்வமே! எம்முள்ளிருந்து எல்லோர்க்கும் வழிகாட்டியாக வாழ்ந்த தாயே! உங்கள் பிரிவால் ஏங்கும் நாங்கள் நின்னுயிர் சாந்தமாகச் சாந்தியடையப் பிரார்த்தனை செய்கின்றோம்.

12-9-88இல் நடைபெற இருக்கும் அந்தியேட்டியிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(6468)

### ஐக்கிய சோஷலிச அணி போட்டியிடாது

ஜனாதிபதித்தேர்தலில் ஐக்கிய சோஷலிச அணி போட்டியிடாது.

அணியின் தலைவி திருமதி. சந்திரிக்கா குமாரணதுங்க தற்போதைக்கு அரசியலில் இருந்துவிலக முடிவு செய்திருக்கிறார்.

அதைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சில சம்பவங்களை மிகைப்படுத்தி

# ஈழப்போராட்டத்துக்கு எதிராக திட்டமிட்டுப் பிரசாரம்

## மதுரை மாநாட்டில் கண்டனத் தீர்மானம்

மதுரை செப். 12

தமிழ் நாட்டில் பல்வேறு கொலைகள் சமூக விரோதக் காரியங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்களை மிகைப்படுத்தி ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகவும் ஈழத் தமிழருக்கு எதிராகவும் திட்டமிட்டுப் பிரசாரம் செய்யப்பட்டது கண்டிக்கத்தக்கது.

தமிழ் நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து மதுரை நீ ல் திரையரங்கில் நடைபெற்ற மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுரைநகர காமராஜ் காங்கிரஸ் தலைவர் பி. சீனிவாசன் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

திராவிடர் கழகப் பொதச்செயலாளர் திரு. கி. வீரமணி, காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப நெடுமாறன், இரா. செழியன் உட்படப்பலர் பேசினர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

★ இலங்கையில் இந்திய இராணுவத்தாக்குதலால் படுகாயமடைந்து தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவர்கள் உட்பட 200 விடுதலைப் புலிகளைக்காரணமின்றி தேசியப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் வைத்துள்ளது கண்டிக்கத்தக்கது.

★ இலங்கையில் இந்திய இராணுவத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவம் மற்றும் நிவாரண உதவி புரிய முன்வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி களை இலங்கைத் தமிழர் பகுதிகளுக்குள் நுழைய விடாமல் இந்திய இராணுவம் தடுத்ததற்கு இந்த மாநாடு கண்டனத்தைத் தெரிவிக்கிறது. (ஒ-எ)

உ

யாழ். தாவடி
இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
பழைய மாணவர் சங்கம்

**அங்குரார்ப்பணக் கூட்டம்**

**காலம்:** 25-09-88 ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு.
**இடம்:** ஷ பாடசாலை மண்டபம்.

ஒரு வருடத்துக்குமேல் இங்கு கல்வி பயின்ற மாணவர்கள், பழைய ஆசிரியர்கள், தற்போதைய ஆசிரியர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அநு. வை. நாகராஜன்
அதிபர்.

மா. சண்முகரத்தினம்
இணைப்பாளர்.

( ஷ சங்க அமைப்புக் குழு சார்பில் )
(6469)

**புதிய உயர் கல்லூரி**
**G. A. Q. Ist in com.**
**90 ஆம் ஆண்டு**

✶ மேற் கூறப்பட்ட பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் 03 - 09 - 88ல் இருந்து ஏற்றுக கொள்ளப்படுகின்றன.
✶ இதற்கான பல்கலைக்கழக பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம் விபரங்களை நேரிலும் தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.
✶ தற்போது நியமனம் பெற்ற ஆரம்ப ஆசிரியர்களின் நலன்கருதி விரிவுரைகள் 18.9.88 ஆரர்பமாகின்றன.

விபரங்களுக்கு:-
**S. அருள்நங்கை**
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
கிளை
புதிய உயர்கல்லூரி,
மல்லாகம்.
(C/170)

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்
**உஷா சினிமா**
விஜயகாந்தின்
**தம்பி தங்கக்கம்பி**
(ஒரிஜினல் பிரதி)

வெங்கடேஷ் - சசிகலா - லட்சுமி
நடித்த
**எழுதாத தீர்புகள்**
(ஒரிஜினல் பிரதி)
சத்தியராஜ் - அமலா
நடித்த
**ஜீவா**
(தரமான பிரதி)

பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளவும்
**உஷா சினிமா**
162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(6416)

## அரியாலை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

க்கை விடப்பட்டுள்ளது.

தென் இலங்கையில் உள்ள இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பற்றியும் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது

தடுப்புக் காவலில் உள்ள கைதிகளை விடுதலை செய்யக் கோரி மீண்டும் உண்ணாவிரதம்மேற்கொள்ளப்பட்டால் தமது முழு ஆதரவையும் வழங்குவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

கூட்டத்தில் செயலாளர் இரா. முருகையன் உட்பட பலபொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் உரைநிழ்த்தினர்.

உபதலைவர் ப. கணபதிப்பிள்ளை நன்றியுரை நிகழ்த்தினார். (இ-5)

## 751 இலக்க பஸ்சேவை புதிய பாதையில்

பருத்தித்துறை, செப்12

பருத்தித்துறை யாழ்ப்பாணம் 751 ஆம்இலக்க இ. போ. ச. பஸ்சேவையும், தனியார் பஸ்சேவையும் சனிக்கிழமை முதல் புதிய பாதையில் நடைபெறுகின்றன.

இதுவரை தம்பசெட்டி, நாவலடி, அல்வாய் ஊடாகச் சென்று வியாபாரிமூலையை அடைந்து பின்புடற்கரைவீதி வழியாக இவை சேவையாற்றி வந்தன.

தற்போது வாகனங்கள் பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டுக் கல்லூரிவீதியூடாக, மணல் வீதியை அடைந்து, அங்கிருந்துஆனைவிழுந்தான் வீதிக்குச் சென்று, பின்பு எரிந்த அம்மன் கோவில் முன்வீதியால் கடற்கரை வீதியைச் சென்றடைகின்றன. (இ-118)
(இ-எ)

## 15முதல் 26 ஆம்......

(1-ம்டக்கத் தொடர்ச்சி)

பன ஊழியர்கள் அனைவரும் கறுப்புப்பட்டிகளை அணிந்து கடமைக்குச் செல்லவேண்டும். மாணவர்கள் அனைவரும் கறுப்பு பட்டிகளுடன் பாடசாலைகளுக்குச் செல்லவேண்டும், வாகனங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்படவேண்டும் என்றும் இணைப்புக் குழுக் கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பிரஸ்தாபதினங்களில் சகல பிரசைகள் குழுக்களும் தமது பகுதிகளில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவும், 24 ஆம், 25 ஆம் திகதிகளில் அன்னதானம் வழங்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

15 ஆம் திகதி முதல் 26 ஆம் தி திவரையான நாட்களில் நல்லூர் ஆலய முன்றலில் நடைபெற உள்ள உண்ணாவிரதத்திலும், பொதுக்கூட்டத்திலும் சகலரையும் கலந்துகொள்ளும் படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு, கிழக்கிலுள்ள சகல பொது மக்களும், ஸ்தாபனங்களும் பிரஸ்தாப தினங்களில் ஆடம்பர நிகழ்ச்சிகளை தவிர்த்துக்கொள்ளும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

( 3·1 )

சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)

**பகிரங்க ஏல விற்பனை**

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 17-9-88 சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

1. உடைந்த கைத்தறித் தளபாடங்கள்

கோழி, மாட்டுத் தீனுக்கு உகந்ததான:-

2. பழுதடைந்த தட்டாப் பருப்பு
3. பழுதடைந்த பயறு
4. கழிவு சீனி

இப்பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் வேலைநேரங்களில் சங்கத்தில் பார்வையிடலாம்.

தலைவர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

10-09-1988.
(C/164)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சூசைப்பிள்ளை இராஜேஸ்வரன்

திரு. சூசைப்பிள்ளை இராஜேஸ்வரன் காலமானார். இவர் ஒலுமடு (மாங்குளம்) வனபரிபாலனத் திணைக்கள அதிகாரியும், சரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை எலிசபெத் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் சாயாதேவியின் அன்புக்கணவரும் யோகேஸ்வரன் (புல்மோட்டை இல்மனைற் கூட்டுத்தாபனம்) பெனடிக்ற் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மயில்வாகனம், திருமதி மயில்வாகனம் மரியாம்பிள்ளை (V. C. O.) இன்னாசைமுத்து, பஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அருமை மருமகனும், சந்திரேஸ்வரி, சந்திரசேகரம், விஜயகாந்தன், கிருஷ்ணவேணி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின்பூதவுடல்13-09-88 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் 54, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தில் இருக்கும் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்: மனைவி
(6413)

### இராசையா சிவனேஸ்வரராஜா(ராசன்)

யாழ் அரசாங்க வைத்தியசாலையில் கடமையாற்றும் இராசையா சிவனேஸ்வரராஜா காலமாகிவிட்டார். இவர் சி. இராசையா, பாக்கியம் அவர்களின் புதல்வரும் தங்கராணி (யாழ் அரசாங்க வைத்தியசாலை) அவர்களின் அன்புக்கணவரும் லோஜி, பிரியா, சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பராய் வடக்கு அவரது இல்லத்தில் 13-09-88 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி அளவில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மனைவி மக்கள்
உரும்பராய் வடக்கு (6414)

### விசுவர் சரவணமுத்து

குறிகட்டுவான் 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விசுவர் சரவணமுத்து இறைவனடி எய்தினார். இவர் நாகமுத்துவின் அன்புக் கணவரும், சதாசிவம், கண்மணி, நாகபூசணி, செல்லம்மா, நாகரட்ணம் [செட்டி] கருணாவதி, சிவானந்தத்தின் [ஆசீர்வாதம் புத்தகசாலை] அன்புத் தந்தையும், தம்பு, செல்வரட்ணம், உதயகுமார், அங்கயற்கண்ணி, ராஜலட்சுமி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் 12-9-88 திங்கட்கிழமை பி. பகல் 1 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக குறிகட்டுவான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
பிள்ளைகள்
(6474)

MACK TRAVEL for AIR TRAVEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் [illegible] நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 12- 09- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd292/2 Navalar Road, Jaffna on Monday 12th September 1988